
சென்னை மாநகராட்சி
சிறப்பு திட்டங்கள் துறை

## <u>அலுவலக அமைப்பு அட்டவணை</u>



# <u>சிறப்புத் திட்டங்கள் துறை</u>

மக்களின் நலனுக்காக முன் மாதிரி திட்டங்களை தீட்டுவதில் சென்னை மாநகராட்சி நாட்டிலேயே முன்னோடியாக திகழ்கிறது. அதன்படி, பாதசாரிகளின் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மாசுபடுவதை குறைத்தல் மற்றும் நடப்பதே உடல் ஆரோக்கியம் என்ற கொள்கையினை கருத்தில் கொண்டு மோட்டார் வாகனம் இல்லா போக்குவரத்தினை (Non Motorised transport) ஊக்குவிக்கும் விதமாக 'மோட்டார் வாகனம் அல்லாத போக்குவரத்து கொள்கையை' 30.09.2014 அன்று நடந்த மாமன்றக்கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. சிறப்புத் திட்டங்கள் துறையில் கீழ்காணும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டது.

1. **ஹாரிங்டன் சாலையில் மேம்படுத்தும் பணி :**

   ஹாரிங்டன் சாலையில் மேம்படுத்தும் பணி எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இதில் சிமெண்ட் கான்கிரீட் சாலையில் கம்பி வடங்களுக்கான பெட்டகம், புதிய மழை நீர் வடிகால் மற்றும் கிரானைட் நடைபாதை அமைக்கும் பணி எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

2. **மெரினா கடற்கரையை அழகுபடுத்தும் பணி :**

   மெரினா கடற்கரையை அழகுபடுத்தும் திட்டத்தில் ஒரு பகுதியான காமராஜர் சாலையில் மேற்குப்பக்கம் அமைந்துள்ள நடைபாதையை மேம்படுத்தும் பணி எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும். கிழக்குப் பக்கம் உள்ள அனைத்து சுற்றுச்சுவர்களும் வார்ப்பிரும்பிலான கிரிலுடன் கலைவண்ணத்துடன் பாரம்பரியம் மிக்க தூண்களுடன் ஒரே மாதிரியான சுற்றுச் சுவர் அமைக்கும் பணி எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

3. **தியாகராய நகர் சாலையில் நடைபாதை வளாகம்:**

   சென்னை மாநகரில் தியாகராய நகர் ஒரு மிகப் பெரிய வர்த்தக இடம். இங்குள்ள பாண்டி பஜார் தியாகராய சாலையில் மக்கள் நடப்பதற்கும் கடைகளுக்கு செல்வதற்கும் மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, இப்பகுதியில் நடைபாதை பிளாசா அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் அகலமான நடைபாதை, நீரூற்றுகள், பூங்காக்கள் மற்றும் நவீன கழிப்பிடங்கள் அமைய உள்ளன. இதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு நிதி ஆதாரம் உலக வங்கி மூலம் பெறப்படவுள்ளது. தற்போது உலக வங்கியின் கோரியுள்ளபடி சுற்றுப்புற சூழல் பற்றிய ஆய்வு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

4. **உலக தரம் வாய்ந்த சாலைகள் :**

   டாக்டர் அம்பேத்கார் சாலை , அசோக்நகர் 1–வது நிழற்சாலை, அசோக்நகர் 4–வது நிழற்சாலை மற்றும் அசோக்நகர் 11–வது நிழற்சாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு நிதி ஆதாரம் உலக வங்கி மூலம் பெறப்படவுள்ளது. தற்போது உலக வங்கியில் கோரியுள்ளபடி சுற்றுப்புற சூழல் பற்றிய ஆய்வு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**5. ஆகாய நடைபாதை :**

ஆகாய நடைபாதை என்பது பாதசாரிகளுக்கான நடைபாதை மேம்பாலம் ஆகும். இந்த நடைபாதையானது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட போக்குவரத்து நெரிசல் மிகுந்த சாலை சந்திப்புகளை கடந்து செல்லும் நடைபாதை மேம்பாலம் ஆகும். சென்னையில் இரண்டு ஆகாய நடைபாதை அமைக்கப்பட உள்ளது. மாம்பலம் இரயில் நிலையத்திலும் தியாகராய நகர் பேருந்து நிலையத்தின் இணைப்பதற்கு ஆகாய நடைபாதை மற்றும் கோட்டை இரயில் நிலையத்தையும் பாரிமுனை பேருந்து நிலையத்தையும் இணைக்கும் ஆகாய நடைபாதை அமைக்க தெரிவு செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கு சாத்தியக்கூறு அறிக்கை தயாரிப்பதற்கு கலந்தறிதற்குரிய தெரிவு செய்யப்பட்டு தற்போது ஆய்வுப்பணி நடைபெறுகிறது. ஆய்வு அறிக்கை பெற்ற பிறகு பணிகள் மேற்கொள்ளப்படும்.

**6. மிதிவண்டிகளை பகிர்ந்து பயன்படுத்தும் திட்டம்**

சென்னையில் சுமார் 3000 மிதிவண்டிகளுடன் பொதுமக்கள் பகிர்ந்து உபயோகப்படுத்துவதற்காக, கணினிமயமாக்கப்பட்ட தானியங்கி சேவைகளுடன் கூடிய திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இப்பணி பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் நிறுவகித்தல் (PPP mode)என்ற முறையில் மேற்கொள்ள தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**7. வாகன நிறுத்துமிடம் முறைபடுத்துவதற்காக திட்டம்**


சென்னை மாநகராட்சியில் சுமார் 6000 வாகனம் நிறுத்துவதற்கான இடம் உள்ளது. இதை ஒழுங்கு படுத்துவதற்காக வாகன நிறுத்துமிடம் மேலாண்மை முறை வகுக்கப்படவுள்ளது. இப்பணி பொது தனியார் பங்களிப்புடன் நிறுவகித்தல் (PPP mode) என்ற முறையில் மேற்கொள்ள தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**8. மெரினா இணைப்பு சாலை மேம்படுத்தும் பணி**

மெரினா இணைப்பு சாலை மேம்படுத்தும் திட்டப்பணி (காமராஜர் சாலை சந்திப்பு முதல் பட்டினம்பாக்கம் வரை).__இதில் சிமெண்ட் கான்கிரீட் சாலை, கிரானைட் கற்கள் நடைபாதை, மிதிவண்டி பாதை, மழைநீர் வடிகால் கால்வாய், சேவைத்துறைக்கான சிமெண்ட் கான்கிரீட் குழாய், நிலத்தடியில் கழிவுநீர் வடிகால் மற்றும் மின்விளக்கள் அமைக்கும் பணி எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

Corporation of Chennai
Special Project Department

## Organisation chart



# Special Projects Department

In order to promote Non Motorised Transport (NMT) to reduce pedestrian-vehicle conflict, pollution and traffic congestion, council as approved not Motorised Transport Policy in the council meeting held on 30.09.2014. Following works have been taken up by Special Projects.

1. **Upgradation of Harrington Road :**
   Upgradation of Harrington Road has been taken up, In this work C.C. Road, Cable duct, Storm Water Drain and Granaite foot path are proposed.
2. **Marina Beautification Projects :**
   Marina Beautification Projects has been taken up. In Western of Kamarajar salai reconstruct compound wall with Heritage pillar , Cast iron grills and paving with granite have been taken up.

3. **Pedestrian Plaza at Thiyagaraya Road :**
   It is proposed to take up Pedestrian Plaza at Thiyagaraya Road . This Projects is to be executed under world bank fund. As per request of the World Bank Traffic study, Environmental and Social Study has been taken up.

4. **International Road :**
   International Road has been proposed at Dr. Ambedkar Salai, Ashok Nagar 1 Avenue, Ashok Nagar 4 Avenue and Ashok Nagar 11 Avenue. This Projects is to be executed under world bank fund. As per request of the World Bank Traffic study, Environmental and Social Study has been taken up.

5. **Sky Walk :**
   Sky walk has been proposed at T.Nagar connecting Mambalam Railway Station and T.Nagar Bus Terminus and at Parrys connecting Chennai Fort Station and parrys corner via Broadway Bus Terminus.

6. **Cycle Sharing Projects :**
   Cycle Sharing Projects has been proposed by using new technologies. With approximately 300 cycles. Action has been initiated to taken up project under PPP Mode.

7. **Parking Management Systems :**
   Parking Management Systems has been proposed by using new technologies and policy to improve parking operation in the city. Action has been initiated to taken up project under PPP Mode.

8. **Marina Loop Road :**
   Marina Loop Road from the Junction of Light House to Pattinabakkam Greenways salai. In this project CC road, Granite footpath, cycle track, storm water drain, Cable ducts and street lights have been proposed